528

பதிவு எண் — M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

MADRAS

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—34 குருகுலம், மாம்பாக்கம்; கர, புரட்டாசி; 5—10—51. தளிர்—51

குருகுலத்தின் குறிக்கோள் :

திருக்குறளின் உயிர்ப்பு

‘‘உலகம் ஒரு குலம்’ என்னுங் கொள்கை திருக்குறளின் உயிர்ப்பு!

உலகை ஒரு குலம் ஆக்குவதற்கென்று அன்பு இயற்கையில் அமைந்துள்ளது.

அவ் வன்பின் வழி வாழ்க்கை வளர்தல்வேண்டும்.

பொதுமையும் மனத் தூய்மையும் உலகம் ஒரு குலம் என்னும் உயிர்ப்பை இயக்கும் இரண்டு நுரையீரல்கள்!

இவ் வழியில் இயங்கி வளரும் வாழ்க்கையே பண்பும் பயனும் உடையதாகும். பண்பும் பயனும் உடைய வாழ்க்கையே ஒரு கலை.

வாழ்க்கைக் கலையே மற்றக் கலைகளின் தாயகம்.

திருவள்ளுவரின் வாழ்க்கைக் கலை முப்பாலால் ஆகியது. அவை அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என்பன.

உலகம் ஒருகுலம் என்பதற்குக் கால்கொள்ளும் இடம் காமத்துப் பால். அக் காலுக்கு உரம் அளிப்பது பொருட்பால். இரண்டையும் ஒழுங்கில் இயக்கிக் காப்பது அறத்துப் பால். மூன்றன் குறிக்கோளும் உலகம் ஒரு குல மாதல் வேண்டும் என்பதே.”

—திரு. வி. க.

(டாக்டர் மு. வ. அவர்களின் ‘திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்க நூல்’ அணிந்துரை)

சிந்திய கருத்துக்கள்

பெரிய புராணச் சொற்பொழிவில்

(மயிலை ந. இராமலிங்கம்)

1. அறிவுக்கு மேற்பட்டது குணம்; குணத்தால் அமைந்ததே ஞானம்.

2. அறிவு நன்மை தீமை அறியும்; குணம் பயனுள்ள வாழ்க்கைக்கு உதவும்.

3. அறிவு நிலையில் வருங் குற்றங்கள் குண நிலையில் வரா; குணமே பெருந்தன்மை; குணம் துயர் போக்கும்.

4. அடியாரியல்பு, நல்லவரியல்பு, சான்றோரியல்பு என்பனவெல்லாம் குண நலமே; ‘குணநலம் சான்றோர் நலம்’ என்பது திருக்குறள்!

5. சான்றோர் மோன நிலையில் இருந்து உணர்வு வெளியை எட்டுவர்; எட்டி, அங்கு உலாவும் நுண்ணிய ஒலிகளை (எழுதாக் கிளவிகளைத்) தம் மெய்யுணர்வால் உணர்ந்து, மக்களுக்கு மொழியொலியில் (செவிப் புலனாகும் எழுத்தொலியில், மொழி நடையில்) உணர்த்துவர்.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

கிளை 34	கர, புரட்டாசி, 5-10-51 வெள்ளி	தளிர் 51

- முதல் தளிர் -

'முல்லைக் கொடி'க்கு இந்தக் கிழமை நான்காவது ஆண்டின் தொடக்கம்; இது, அதன் முதல் தளிர்!

ஆற்றலுள்ள புதிய மன்பதையை உருவாக்கும் உழைப்புடையது குருகுலம்! அதன் செய்தித் தாள் 'முல்லைக் கொடி'!

மாம்பாக்கம் என்னும் வட திருச்சிற்றம்பலப் பெருந் தலத்தில் எழுந்துள்ள குருகுல நிலையம், உலக குரு திருவள்ளுவரின் வழி நின்று செயலாற்றும் செய்கை நிலையம்! ஆக் குருதேவர் வழங்கிய 'திருக்குறள்' என்னும் உலக வேதமே, அதாவது மன்பதைப் பொதுமறையே குருகுலத்துக்கு நூல்!

ஆதலால், குருகுலம், மன்பதைப் பொது நோக்கம் உடையது. எனவே, இம் 'முல்லைக் கொடி'யும் எவ்வகை வெறிக் குணமும் இல்லாமல், தெய்வப் பண்பில் நின்று அருட் பணியுடன் தொண்டு புரிவதாகும்!

மக்கள் வாழ்க்கைச் சிறப்பு, அவர்கள் பண்பையும் திறமையையும் பொறுத்திருக்கிறது. 'பண்பு' என்பது அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்று பிரிவுபடும்; இந்த ஐந்தையும் ஒன்றாகச் சேர்த்து 'அன்பு' என்றும் பெரியோர் வழங்குவர். 'திறமை' என்பது மொழி, கலை, தொழில், அருள், பணி என்று பிரிவுபடும். இந்த ஐந்தையும் ஒன்றாகத் தொகுத்து 'அறம்' என்றும் சொல்வர்.

பண்புகள் நுட்பமாய் நிகழும்; திறமைகள் பருமையாய்ச் செயற்படும். அன்பும் அறமும் என்னும் இந்த இருவகையும் மக்களிடத்தில் சிறக்கச் செய்வதுதான், 'மன்பதைத் தொண்டு' என்பது.

இவற்றில், திறமைகள் செயலில் வரவரப் பண்புகள் நன்றாகப் பண்பட்டு வாழ்க்கையை நயமாக்குகின்றன. ஆதலால், திறமைகள் செயற்படுவது வாழ்க்கைக்கு முதன்மை! அவை மொழி கலை தொழில் முதலியன வாதலின், 'மன்பதைத் தொண்டு' என்றதும், மொழித் தொண்டு முதலியன முன்னிற்கின்றன. 'பிறந்து மொழிபயின்று' என்ற காரைக்காலம்மையார் வாக்கிலும் இம் முறைமை தோற்றமுற்றது.

பிறந்த மக்கள், உரிய நோங்களில், ஒன்றேனும் மொழி பயின்று கலை தெரிந்து தொழில் பழகி, அருள் அமர்ந்து பணி இயற்றும் கடமையில் இருக்கின்றனர். இப் பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உண்டு. சிலர் சிலவற்றிற் சிறப்பாக விளங்கினும், பொதுவாக எல்லாரும் இந்த ஐவகைத் திறமைகளிலும் பழகிவருவது நல்லது.

இத் திறமைகளும் பண்புகளும் மக்களிடம் மிளிர்ந்தால், ஆற்றல் வாய்ந்த புதிய மன்பதையை (சமூகத்தை) நாம் நாட்டிற் காணலாம். மாட்சிமை வாய்ந்த இம் மன்பதைத் தொண்டை, 'முல்லைக் கொடி', சான்றாண்மை யிதழாய்ப் படர்ந்து நாட்டில் வாழ்க்கைச் செழிப்பைப் பெருக்க, இயன்ற அளவும் முயலும். நேயர்கள் இதனை அன்பிசைவோடும் பொறுப்புணர்வோடும் இல்லந்தோறும் படர வைத்து, நாடு நலம்பெற உதவுதல் நல்லது.

குருகுல மாநாடு
ஆய்வுரைக் கூட்ட

அழைப் பிதழ்

அன்புடையீர்!

நமது மாம்பாக்கம் குருகுலத்தின் வளர்ச்சி பற்றியும், அதன் கொள்கைகளையும் பணித்திட்டங்களையும் பொது மக்களிற் பலரும் அறிந்து ஈடுபட்டுச் சிறப்பதற்கு வாய்ப்பளிக்கிற முறையில் வருகிற கார்த்திகைத் திருநாளின் போது குருகுல மாநாடொன்றை நடத்துவது பற்றியும் ஆராய்ந்து தக்க முறைகள் செய்ய (21-10-51) ஞாயிறன்று காலை 8-மணிக்கு ஓர் ஆய்வுரைக் கூட்டம் சென்னைச் சிவனடியார் திருக்கூட்ட மண்டபத்தில் ஆசிரியர் அவர்களின் முன்னிலையில் நடைபெறும். தாங்கள் அன்புகூர்ந்து வந்திருந்து தக்க கருத்துக்களைச் சொல்லி உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றோம்.

குருகுலச் செய்தியாளர்.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

டாமல், பொது மக்கள் சார்பில் கூட்டி, வாக்காளாகளின் பெரும் பொறுப்பை நினைவூட்ட முன் வந்தவர்கள் அனைவருக்கும் என் வாழ்த்து உரியதாகும். இதனால் ஏற்படும் நல்லுணர்ச்சி, நாட்டின் ஆட்சியில் நல்லோர்களை அமர்த்தி நன்மை செய்யுமாக! மக்களின் இன்றியமையாத வாழ்க்கைத் தேவைகளான உணவு உடைத்தட்டுப் பாடுகள் ஒழியுமாக! நாடு நலமுறுவதாக.

வாக்காளர் மாநாடு

தேர்தல்பற்றித் திரு. வி. க. கருத்து

சென்னை மேரி மண்டபத்தில் 30-9-51ல் தமிழ் நாட்டு வாக்காளர் மாநாடு ஒன்று நடந்தது. அதைத் திரு. கணபதி அவர்கள் முயன்று நடத்தினார் என்று தெரிகின்றது.

அதன் நோக்கம், இந்த நாட்டு வாக்காளர் ஒவ்வொருவரும் தம்முடைய வாக்குகளைத் தக்கவர்களுக்கே வழங்கவேண்டும்; கட்சிகளையோ வேறு பிற சூழல்களையோ பார்க்கக்கூடாது; பார்த்தாலும், தமது கட்சியிலும் சூழல்களிலுங் கூடத் தக்கவர்களையே தேர்ந்தெடுக்க வேண்டும்; இதற்கே வாக்கைப் பயன்படுத்த வேண்டும்' என்று மக்களுக்கு உணர்த்துவது.

பேரறிஞர் திரு. A. V. இராமன் அவர்கள் தலைமை தாங்கினார்; அரிய உரைகளும் வழங்கினார்.

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களும் மாநாட்டிற் கலந்து கொண்டது குறிப்பிடத் தக்கது.

மாநாட்டில், இந்த நாட்டிலுள்ள பெரும்பாலான வாக்காளர்களின் நிலையைச் சித்திரிக்கும் படம் ஒன்று திறந்து வைக்கப் பெற்றது;

'உழவர்கள் நிறைந்தது நம் நாடு. அவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்க்குமேல் படிக்காதவர்கள். வயது வந்தவர்களுக் கெல்லாம் வாக்கு உண்டு என்று அரசினர் அறிவித்து விட்டனர். வாக்காளரிற் பலர்க்கு, வாக்கு என்பது என்ன? அதன் தகுதி ஆற்றல் எவ்வளவு? அதை எந்தக் கட்சி யாருக்கு எந்தப் பெட்டியில் போடவேண்டும்? என்பன தெரியவில்லை. தமக்கு மே[ல்]லுள்ள படித்தவர்கள் செல்வர்கள் அதிகாரிகள் சொல்லுகிறபடி தம் அரிய வாக்குகளைத் தாம் நேரில் அறியாதவர்களுக்குக் கூடப் போட்டு விடுவார்கள்.

இந்த நிலைமை படத்தில் உருக்கமாகச் சித்திரிக்கப்பட்டிருந்தது.

மாநாட்டில் பெரியார் திரு. வி. க. அவர்கள் கொடுத்த அறிவுரையின் சுருக்கம் வருமாறு:

ஒரு மக்கட் குழு அல்லது நாடு வளர்ச்சியுற வேண்டுமானால் கருத்து வேற்றுமைக்கு இடந்தர வேண்டும். அப்படி இடங் கொடுத்து ஆராய்வதுதான், வாழ்க்கையின் எந்தத் துறையிலும் அறிவும் தெளிவும் உண்டாக்கும். ஆகவே, கட்சிகள் பலவற்றையும் மதிக்கவேண்டும். அந்தந்தக் கட்சிகளின் திட்டங்களை ஆராய வேண்டும்.

அண்மையில் தேர்தல் விழா வருகிறது. அதில் கலந்துகொள்வோர் வாக்காளர்கள்.

இதற்குமுன் நம் நாட்டில் இப்போது வருகிற தேர்தலைப்போல ஒன்று நடைபெறவில்லை. இப்போது, வயது வந்தவர்களுக் கெல்லாம் 'ஓட்டு' இருக்கிறது. அவ்வக் கட்சிக்காரர்களும் தத்தமக்கு வாக்குக் கேட்பார்கள். கட்சிக் கொள்கைகளை மட்டும் பாராமல், தேர்தலுக்கு நிற்போரின் தகுதி திறமைகளையும் நேரில் அறிந்து தக்கவர்களையே தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்கள், தாம் விரும்பும் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் இல்லாவிட்டாலும் அவர்களுக்கே தமது வாக்கை அளிக்க வேண்டும்.

தகுதி திறமை என்றால், கல்வி கேள்வி எழுத்து பேச்சு ஆற்றல் மட்டுமல்ல; தொண்டு மனப்பான்மை ஒழுக்கம் முதலியவற்றை முதன்மையாய்க் கவனிக்கவேண்டும். பதவிக்குச் சென்றவிடத்தில் தம்மை நாட்டுத் தொண்டராகக் கருதி மகிழக்கூடிய தன்மையும், பதவி உயர உயரப் பணிவும், மேன்மேலும் தொண்டாற்றும் பேறு பெற்றேமே என்று மகிழ்ந்து மக்களுக்கு எளியராய் மாறிப் பணியாற்றும் மனப்பான்மையும் உடைய தகுதியாளர்களுக்கே வாக்கை வழங்கவேண்டும்.

இந்த மாநாட்டைக் கட்சி, மதம், சாதி முதலிய எந்த வேறுபாட்டின் அடிப்படையிலும் கூட்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1

* * பெரியபுராணம் * *

அப்போது அவர் வெளியே விரைந்து கடைத்தெரு வழியாய் ஓட, நம்பியாரூரரும் கடிது பின் தொடர்ந்து பற்றி அவரிடமிருந்த ஆளோலையைப் பறித்து, 'அந்தணர் வேறொருவர்க்கு ஆளாய்ப் பணி செய்தல் என்பது என்ன முறை' என்று கூறிக் கிழித்தெறிந்தார். நம்பிகளை யல்லால் இங்ஙனம் அவரை வேறு யார் தொடர்ந்து எட்ட வல்லார்! இறைவன் இது 'முறையோ!' என்று அலறி முறையிட்டான்.

வேதநூல் பலகால் முறையிட்டும் இன்னமும் அறிவதற்கரியான் இறைவன். நூலறிவுக்கு அவனியல்பு எட்டாது; உள்ளுணர்வுக்கு மட்டுமே எட்டத் தக்கது அது. வேதம் முறையிடுதலென்றது, புற அறிவின் நிகழ்ச்சி; உள்ளுணர்வு என்னும் மெய்யுணர்வு நிகழ்ச்சியன்று; அதனால், பெருமான், வேத முறையீட்டுக்கு அரியனாயினான்.

அத் தகைய அரிய பெரியோன், தன் வாயினால் யாரையும் அழைத்து முறையிட வேண்டிய கட்டாய மில்லை; இருந்தும், ஆரூரரை ஆட்கொள்ளக் கருதிய ஒரு காரணம் பற்றி ஒரே ஒரு முறை 'முறையோ' என்றான்.

அருகிலிருந்தவர், இருவரையும் விலக்கி, முதியோரைப் பார்த்து, 'உலகில் இல்லாத ஒரு முறையைக் கொண்டு மாறுபாடு செய்கின்ற மறை முனிவரே, நீங்கள் இருக்கும் இடம் எது? சொல்லுங்கள்' என்று கேட்டனர்.

'எல்லாம் நான் இங்கேதான் இருக்கிறேன்; எனது இருப்பிடம் அப்படி யொன்றும் தூரமில்லை; அருகில் இருக்கும் திருவெண்ணெய் நல்லூர்தான்! அது இருக்கட்டும்; அற முறை என்பது ஒன்றும் இல்லாமல் முரட்டுத் தனமாக என் கையிலிருந்த ஆளோலையை வலிய வாங்கிக் கிழித்ததனால் எனக்கு இவன் அடிமை என்பதைத் தானே புலப்படுத்திவிட்டானே' என்றார் அம் முதியோர்.

நம்பியாரூரர் 'இவன் பழைய மன்றாடிபோலும்' என்று கருதி, பண்பு சிறந்த அன்புள்ளமும் அம் முதியோரிடம் மிக, 'திருவெண்ணெய் நல்லூர் ஊரானால் உனது பிழை நெறி வழக்கை அங்கே பேசலாம் வா' என்று அழைத்தார்.

வேதியன் அதனைக் கேட்டு, 'திருவெண்ணெய் நல்லூரிலே நீ வந்தாலும் நல்லதுதான்; அங்கே விளங்கும் புனித நான்மறையோர் முன், முதல் முதல் எழுதித் தந்த மூல ஆளோலையைக் காட்டி நீ எனக்கு அடிமையாதலைச் சாதிப்பேன்' என்று சொல்லித் தடியை முன் ஊன்றி விரைந்து சென்றான்.

காந்தத்தை வலிய இரும்பு அணைவதுபோல நான் மறையோன் பின்னே நம்பியாரூரரும் ஈர்ப்புண்டு விரைந்தார். சூழ இருந்தோர் இவ் வழக்கு என்ன ஆகுமோ என்று உடன் சென்றனர்.

திருவெண்ணெய் நல்லூரை நண்ணி, நாதனாகிய மறையோன், அங்கிருந்த அறப்பேரவையின் அந்தணர் முன், 'திருநாவலூரைச் சேர்ந்த நம்பியாரூரன், எனக்கு அடியவன் என்பதற்கு நான் காட்டிய ஆளோலையை வலியப் பறித்துக் கிழித்துவிட்டுப் பேரறிஞர் முன் இதோ வந்து நிற்கின்றான்; இது உங்கள் முன் நான் செய்து கொள்ளும் முறைப்பாடு' என்று வழக்குத் தொடுத்தான்.

அவையினர், 'மறையவர் வேறொருவர்க்கு அடிமையாதல் இந்த உலகத்தில் இல்லையே, நீங்கள் என்ன சொன்னீர்கள் ஐயா' என்றனர். தனக்கு ஆதரவாய்ப் பேசுவோர் யாருமின்றித் தனியாய் நிற்கும் முதியோன், அவையோரை நோக்கி, 'இந்த வழக்கு வந்த வகை உலக வழக்கால் அன்று; தனிப்பட்ட இசைவினால் வந்தது; இவன் கிழித்த ஆளோலை இவன் தந்தை தன் தந்தை, தன் இசைவினால் எழுதித் தந்தது' என்றான்.

நஞ்சன்கூடு பல்பொடி.

பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1.

அதன்மேல், அவையினர் நம்பியாரூரரை நோக்கி, 'இந்த ஆளோலை சம்மதத்தினால் எழுதியதாகத் தெரிகின்றது; சான்றுக்காக இதனைக் காட்டினால், விசையாய் வலிய வாங்கிக் கிழித்து விடுவதும் ஒரு வெற்றியாய் விடுமா? தசை ஒடுங்க மூப்பெய்திய இப் பெரியோன் தன் வழக்கை அறத்தொடு பொருந்தச் சொன்னான்; ஆரூரர் எண்ணம் இனி என்ன?' என்று கேட்டனர்.

அதற்கு அவர் ஆழ்ந்த நினைவு மிக்கவராய், நீதி நூல் முற்றும் உணர்ந்த மறையோரே, நான் ஆதி சைவ அந்தணன் என்பது அறிவீர்கள்; என்னைத் தனக்கு அடிமை என்று இந்த அந்தணன் சாதித்தால், இது மனத்துக்கு எட்டாத ஓர் மாயை என்றுதான் நான் சொல்லுவேன்; எனக்கு இன்னதென்றே இது தெளியக்கூடவில்லை' என்றார்.

இங்ஙனம் இருவர் வாக்கு மூலமும் அறிந்த பின்பு, பேரவை அந்தணர், முதிய முனிவரை நோக்கி, ஐயரே, 'நீர் இனி உமது உரையை எமக்கு முன் நிறுவ வேண்டும்; ஒரு வழக்கை நிறுவுவதற்கு 'ஆராய்ச்சி, சான்று, வழக்கம்' என்று மூன்று வகைகள் மேற்கொள்ளவேண்டும்; ஒன்று காட்ட முடியுமானாலும் காட்டுக' என்று கேட்க, 'முன்னே இவன் சினங்கொண்டு கிழித்த ஓலை படியோலைதான்; மூல ஓலை வேறே உள்ளது; மறுபடியும் இவன் வன்மை செய்து பறிக்காதபடி நீங்கள் பார்த்துக் கொள்ள முடியுமானால், அதனைக் கொண்டுவந்து காட்டுவேன்' என்று எல்லா மாயவித்தைகளும் வல்ல முதியோன் சொன்னான்.

'அப்படியே செய்கிறோம், நாங்கள் தீங்கு நேர ஒட்டோம்' என்று அவர்கள் உறுதி தெரிவிக்க, அல்லல் தீர்த்து ஆள எழுந்தருளிய இறைவன் மூல ஆளோலையைக் கொண்டு வந்தார்.

இறைவன் திருக்கையில் ஓலையைக் கண்டதும், அவையோர் தம் கரணத்தானை ஏவ, அருட்டிரு மிக்க அவனும் ஓலையைத் தொழுது வாங்கி, மடித்திருந்த சுருளை நீக்கி விரித்தான், அதன் பழமை நோக்கிப் பத்திரமாய்க் கையில் பற்றி, அதில் எழுதியிருந்த சொல்லை அவையோர் கேட்கும்படி படித்தான். அது வருமாறு:

"அருமறை நாவல் ஆதி
சைவன் ஆரூரன், செய்கை;
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப்
பித்தனுக்கு, யானும் என்பால்
வருமுறை மரபு ளோரும்
வழித்தொண்டு செய்தற்கு ஓலை
இருமையால் எழுதி நேர்ந்தேன்
இதற்கு இவை என்எழுத்து."

திருநாவலூரைச் சேர்ந்த ஆதிசைவ மரபினனான 'ஆரூரன்' என்னும் பெயருடைய நல்லூரைச் சேர்ந்த முனிவர் நிலையினரான 'பித்தன்' என்னும் பெயருடையவருக்கு, நானும் என் வழியில் தோன்றும் மரபினரும் வழிவழியாக ஆட்பட்டுத் தொண்டு செய்யும் கடமையுடையோம் என்பதற்கு, இந்த ஆளோலை உள்ளும் புறமும் ஒத்து இசைவினால் எழுதித் தந்தேன்; இதற்கு என் கையெழுத்தும் நெட்டெழுத்தும் இவை.

இங்ஙனம் உடன்படிக்கை மொழியைக் கேட்டபின், சான்றுக் கையெழுத்தாக மேலெழுத்திட்டவர்கள் அவற்றைப் பார்த்துத் தம் கையெழுத்துதான் என்று ஒப்புக்கொண்டனர். அதன்மேல், அவையினர் நம்பியாரூரரை நோக்கி, 'ஐயா, இது உங்கள் பாட்டனார் கையெழுத்து தானா என்பதைப் பார்த்துத் தெளிந்து கொள்ளுங்கள்' என்றனர்.

'இன்னுமா இவன் ஆளோலையைக் காணவேண்டும்? இவ்வளவு நாளானபின், இவனுக்கு அது காணமுடியுமா? பாட்டனார் கையெழுத்து இப்படிப்பட்டது என்பது இவனுக்குத் தெரியாமலும் இருக்கலாம். அவர் எழுதிய வேறு கைச் சாத்து இருக்குமானால் இந்த ஓலையின் எழுத்தோடு நீங்கள் ஒப்பு நோக்கி அதற்குமேல் உங்களுக்குத் தோன்றுவதைச் சொல்லுங்கள்' என்று, வலிய ஆட்கொள்ள வந்த வள்ளல் கூறுதலும், அவர்கள், நம்பியாரூரரின் பாட்டனார் எழுதிய ஓலை வேறொன்று பாதுகாப்பிலிருந்ததை வரவழைத்து எழுத்து ஒப்பு நோக்கி இரண்டும் ஒத்திருத்தல் கண்டு, இனி வேறு செயலில்லை என்று தீர்மானித்தனர்.

'நம்பியாரூரரே! இந்த முனிவருக்கு நீர் தோற்றுவிட்டீர். முன் தொடர்பால், இவர்க்கு நீர் ஏவல் செய்தல் கடமையே', என்று பண்பிற் சிறந்த நீதி அந்தணர் முடிவு கூறினர். நம்பிகள், 'விதி முறைமை இதுவானால் நான் இனி இதற்கு இசையேன் என்பது பொருந்துமோ' என்று தமது கருத்தறிவித்துப் பணிக்கு இணங்கி நின்றார்.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE
MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

* வேங்கை மர நிழல் *

[முத்துசாமி]

மலைநாட்டில் நெடுவேள் குன்றத்தில் ஒரு வேங்கை மரம். அந்த மரம் பொன் போலும் நிறமுடைய பூக்களோடு விளங்கிக் கொண்டிருந்தது.

தலைவிரி கோலமாய் ஒரு முலையிழந்த பெண் ஒருத்தி அம் மர நிழலிலே வந்து நின்றாள். மலைவாழும் குறவர்கள் அவளைப் பார்த்ததும் இவள் யாரோ என ஐயுற்றனர். அவ் வமையம் வான் வழியே ஒரு விமானம் இழிந்து வந்து அவள் அருகில் நின்றது. அவ் விமானத்தில் ஒளியுடம்போடு அதாவது தேவ வடிவில் இருவர் இருந்தனர். ஒருவன் அரச கோலத்தில் விளங்கினமையின் அமரர்க்கரசன் போலும்.

அவ்வரசன் அப்பெண்ணிற்கு அவள் கணவனைக் காட்டி அப் பெண்ணையும் விமானத்தில் ஏற்றிக்கொண்டான். மறுபடியும் விமானம் விண்ணை நோக்கிப் பறந்தது. குறவர்கள் தங்கள் கண்களுக்குத் தெரியுமளவும் பார்த்துக் கொண்டிருந்தனர்; விமானம் மறையுமளவும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவ் வரிய நிகழ்ச்சியைப்பற்றிக் குறவர்கள் தங்களுக்குள் வியந்து பேசிக்கொண்டு சேர மன்னனுக்குத் தெரிவித்துவிட்டு வஞ்சிமா நகரத்திலுள்ள குணவாயிற் கோட்டம் என்னும் இடத்தில் அரச போகத்தைத் துறந்து அமர்ந்திருந்த இளங்கோவடிகட்கு,

"பொலம்பூ வேங்கை நலங்கிளர்
கொழுநிழல்
ஒருமுலை யிழந்தாளோர் திருமா
பத்தினிக்கு
அமரர்க் கரசன் தமர்வந்து
ஈண்டி யவள்
காதற் கொழுநனைக் காட்டி
அவளோடெங்
கட்புலங் காண விட்புலம்
போயது
இறும்பூது போலுமஃ
தறிந்தருள் நீ...."

என்று தெரிவித்தனர்.

[பொலம்–பொன், திருமா பத்தினி—அழகிய பெருமை வாய்ந்த பத்தினியாகிய கண்ணகி. இறும்பூது—பெரு வியப்பு].

தாங்கள் கண்ட நிகழ்ச்சியைப் பிறர்க்குச் சொன்னால் நம்புவதற்கரிது என்ற குறிப்போடு 'எங்கள் கண்ணாற் கண்டோம் அது விண்ணை நோக்கிப் போயது' என்றனர். காண்பது கட்புலனேயன்றி வேறு புலனல்ல வெனினும் 'எம் கட்புலங் காண விட்புலம் போயது' என்று கூறியது ஐயம் நீக்கும் பொருட்டே. இது போன்றதொரு நிகழ்ச்சியை இதன் முன்னர்க் கண்டதும் கேட்டதும் இல்லையானமையின் 'இறும்பூது போலும்' என்றனர். 'அஃது அறிந்தருள்' என்று பணிவாகக் கூறியது அடிகளிடம் உள்ள 'பயபக்தி விசுவாசத்தைக்' காட்டுகின்றது.

குறவர்கள் அவ்வாறு கூறியதைக் கேட்ட அடிகளும் வியப்படைந்தனர். அவ் வமையம் அருகிலிருந்த சாத்தனார் என்னும் புலவர் "யானறிகுவனது பட்டது..." என்று தமக்குத் தெரிந்தவரையில், வெள்ளியம்பலத்தில் நள்ளிரவில் காவல் தெய்வம் கண்ணகிக்குக் கூறிய தன் வாயிலாய் அறிந்ததைக் கூறினர்.

அஃதாவது :

"சோழநாட்டில் புகார் என்னும் நகரத்தைச் சேர்ந்த கோவலன் என்னும் வணிகன் ஒரு நாடகக் கணிகையின் சேர்க்கையால் பொருளனைத்தையும் இழந்து தன் மனைவியின் காற்சிலம்பை விற்றற் பொருட்டு மதுரைக்கு வந்து அந்நகரத்துப் பொற்கொல்லனது பொல்லாத சூழ்ச்சியால் கொலையுண்டனன். அவன் மனைவி பின்னர்ப் பாண்டியன் அவைக்குச் சென்று வழக்குரைத்துத் தன் கணவன் குற்றமற்றவன் என்று நிரூபித்து அந்நகரையும் ஒரு முலை திருகியெறிந்து எரியூட்டினள்" என்பது.

சிலப்பதிகாரத்தை முழுமையுமே ஒரு சில அடிகளில் சுருங்கக் கூறிய அழகு நோக்கற்பாலது. பாயிரத்தில் நூற்கருத்தைச் சுருங்கக் கூறல் மரபானமையின் அவ்வாறு கூறினார்.

சாத்தனார் அவ்வாறு கூறக் கேட்ட அடிகள்,

"அரைசியல் பிழைத்தோர்க்
கறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்
தோர் ஏத்தலும்
ஊழ்வினை யுருத்துவந் தூட்டும்
என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண
மாகச்
சிலப்பதி காரம் என்னும்
பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்
டுடைச் செய்யுள்"
என்றனர்.

அஃதாவது நீர் கூறிய நிகழ்ச்சி, 'அரசியலில் நீதி தவறியவர்க்கு

அந் நீதியே கூற்றாகும் என்றும், புகழமைந்த பத்தினியை மனிதர்களேயன்றி வானவரும் ஏத்துவர் என்றும், ஊழ் வினை எப்படியும் தன் பயனை நுகர்விக்கும் என்னும் மூன்று அரிய உண்மைகளைப் புலப்படுத்துவதாயிருக்கின்றது. ஒரு சிலம்பின் காரணமாக இவ்வளவும் நடந்திருப்பதால், இதனைச் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் ஒரு காவியமாக நாம் இயற்றல் வேண்டும், இதனால் உலகம் நலம் பெறும்' என்றனர்.

நம்மனோர் இத்தகைய ஒரு நிகழ்ச்சியைக் கண்டார்களாயின் 'ஆ! அப்படியா நடந்தது' என்று வியந்து 'அண்ணா, அப்பா, அம்மா', என்று தமக்கு அண்மையிலுள்ளவரையெல்லாம் விளித்து 'இன்று மலையில் இவ்வாறு நடந்ததாம், குறவர்கள் கண்ணால் பார்த்தார்களாம்' என்று எல்லாருக்கும் கூறி எல்லாரையும் வியப்படையச் செய்வதைத் தவிர வேறு என்ன செய்வர்? குறவர்கள் அவ்வாறுதான் செய்தனர். இப்படி அரிய நிகழ்ச்சி நடந்தால் பலருக்கும் கூறி வியப்படைவதோடு நின்று விடுதல் 'சாதாரண' மக்கள் இயல்பு.

கேட்ட மாத்திரத்திலேயே அதில் மூன்று அற உண்மைகள் இருப்பதை அறிந்து அதனை ஓர் அழியாக் காவியமாக இயற்றல் வேண்டுமென்று எண்ணிக் கூறியது, அடிகளது நுண்ணறிவையும், எல்லா மக்களிடத்தும் உள்ள பொருள் தன்மையையும் காட்டுகின்றது. அடிகள் அவ்வாறு எண்ணியிராராயின் சிலப்பதிகாரம் என்னும் அரிய நூல் எங்ஙனம் நமக்குக் கிடைத்திருக்கும்; கண்ணகியைப்பற்றித்தான் நாம் எங்ஙனமறிவோம்? ஏனைய காவியங்கள் கதையின் நாயகன் அல்லது நாயகியின் பெயர் கொண்டு விளங்குவதாயிருக்க இந்நூலுக்குச் சிலம்பின் பெயர் வைக்கவேண்டுமென்றது ஒரு சிறப்பு.

அடிகள் அவ்வாறு கூறியதைக் கேட்ட சாத்தனார் 'இந் நிகழ்ச்சி முடி மன்னர்கள் மூவர்க்கும் உரியதாயிருப்பதால் நீங்களே அருளிச் செய்தல் வேண்டும்' என்று வேண்டிக் கொண்டனர்.

“முடியுடை வேந்தர்
மூவர்க்கும் உரியது
அடிகள் நீரே அருளுக......”

என்பது அவர் கூற்று.

நாம் இயற்றின், தம் நாட்டைச் சிறப்பித்தும் பிற நாட்டை வேறு முறையில் கூறியும் இயற்றுவதாகிய குற்றம் தம்பால் நிகழக் கூடும் என்று உன்னித் துறவு கோலத்தில் அடிகள் இருப்பதால் அவருக்கு எந்நாட்டிடமும் பற்று இராதானமையினாலும் ஒரு பெருங் காப்பியத்தை இயற்ற இவ் வருங்குணம் வேண்டப்படுவதானமையாலும் அடிகளையே இயற்றல் வேண்டும் என வேண்டிக் கொண்டனர் என்று சிலர் கூறுகின்றனர். அக் கருத்துக்கொண்டு அப்படிக் கூறியிருப்பின் பின்னர் மணிமேகலை நூலை இயற்ற இவர் எவ்வகையில் தகுதியுடையவரானார் என்று ஒரு கேள்வி எழும். ஆகவே அக்கருத்தோடு அடிகளே இயற்றல் வேண்டுமென்று கூறியிருப்பார் என எண்ண இடந்தரவில்லை. சாத்தனாரும் ஒரு பேராசிரியரே. சிறந்த சான்றோரே. நடுவு பிறழக் கூடியவர் என்று எண்ண இடமில்லை. பின்னர் எக் கருத்தோடு கூறியிருப்பார் எனின் கூறுகின்றேன். சாத்தனார் நடந்த நிகழ்ச்சியைக் கூறி முடித்ததும் அதனை ஒரு காப்பியமாக இயற்றல் வேண்டுமென்ற எண்ணம் அடிகளுக்கே முதலில் தோன்றினமையின் அவர்களே இயற்றட்டும் என்று எண்ணியிருக்கலாம். அன்றியும் அவருடைய நுண் மாண் நுழை புலத்தைப் பற்றியும் சிறந்த ஒழுக்கத்தினைப் பற்றியும் அறிந்தே அவரைக் காணக் குணவாயிற் கோட்டத்திற்கு வந்து அவரோடு அளவளாவ விரும்பியிருப்பார் ஆனமையினால், எவ்வாற்றாலும் இக் காப்பியத்தினை இயற்றி முடிக்கத் தகுந்தவர் என்று எண்ணியிருக்கலாம்.

சாத்தனார் கேட்டுக் கொண்டபடியே அடிகள் 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று பாரதியாரால் புகழப்பட்ட இக் காப்பியத்தை இயற்றி முடித்துச் சாத்தனாருக்கும் காண்பித்தனர். இது நூலெழுந்த வரலாறு.

காந்தியடிகள் பிறந்த நாளில்

குருகுலத்துக்கு

வாழ்த்து

கனம் இளவழகனார் அவர்கள்
சமூகத்திற்கு

அன்பு, அஹிம்ஸை, உண்மை, தேசப்பணி ஆகிய காந்தீயத் தத்துவங்களில் தங்கள் குருகுலம் வளர்ந்து வருகிறது என்பதைத் தங்கள் 'முல்லைக் கொடி' வாயிலாகவும், என் நண்பர்கள் வாயிலாகவும் அறிய மட்டிலா மகிழ்ச்சி!

வாழ்க கலைச்செல்வம்!
ஓங்குக உங்கள் குருகுலம்!

அன்பன் S. R. தியோடர்
(பள்ளி தணிகையாளன்,
செங்கற்பட்டு.)

- பெண் உள்ளம் -

(அமுதம்)

"இன்னுயிர் தந்தெமை
ஈன்று வளர்த்தருள்
ஈந்ததும் இந்நாடே —எங்கள்
அன்னையர் தோன்றி
மழலைகள் கூறி
அறிந்ததும் இந்நாடே—தங்கள்
பொன்னுடல் இன்புற
நீர்விளை யாடிஇல்
போந்ததும் இந்நாடே—இதை
வந்தே மாதரம்
வந்தே மாதரம்
என்று வணங்கேனே!"

என்று பாடிக்கொண்டு, அம்மா! என்று அழைத்தபடி மான் குட்டிபோலத் துள்ளி உள்ளே ஓடிவந்தாள் கமலம். 'என்ன அம்மா' என்று கேட்டுக் கொண்டு அவள் தாய் மங்களம் உள்ளேயிருந்து வந்தாள்.

"இன்று எங்கள் பள்ளியில் 'உத்தமர் நாடகம்' நடக்கப்போகிறது. அதில் நான்தான் ஆண் பாகம் தாங்கி நடிக்கப்போகிறேன். அதில் நடிப்பவர்கள் எல்லாரும் பெண்கள் தான் அம்மா!" என்று ஒரே மூச்சாகச் சொல்லி முடித்தாள் கமலம்.

"உத்தமர் நாடகமா? அதுசரி; அதை நடித்தால் பள்ளிப் பிள்ளைகளுக்கு ஊக்கமாயிருக்குமா? வேறு ஏதாவது இருந்தால் என்ன? என்றாள் மங்களம்.

"என்ன அம்மா, நீ! நான் சொல்வதை முழுதும் கேள்! என்று சொல்லிவிட்டு நாடகத்தின் கதையைச் சுருக்கமாகச் சொல்லத் தொடங்கினாள் கமலம். அவளுடைய அழகிய களை சொட்டும் மதிமுகத்தையும் மகிழ்ச்சியையும் கண்ட மங்களம் 'சரி' என்று அமர்ந்தாள்.

இதுதான் கதை:-ஓர் அரசன்; மிக நல்லவன்தான். ஆனால், பெண்கள் படிக்கக்கூடாது, வீட்டை விட்டே வெளிவரக் கூடாது, அவர்களுக்குப் பாடல் ஆடல் கூடாது என்ற மூட நம்பிக்கை உடையவன். அச் சமயந்தான் ஓர் உத்தமர் வந்து பெண்களின் உயர்வைப் பற்றியும் அவர்கள் கல்வியின் கட்டாயத்தைப் பற்றியும் சொல்லி அரசன் மனத்தை மாற்றுகிறார். இடையே பல வேடிக்கையான கட்டங்கள் உண்டு.

"சரி, வா சாப்பிடலாம்" என அழைத்துக் கமலத்துக்கு உணவு கொடுத்துத் தலை வாரி விட்டாள் தாய் மங்களம்.

"அம்மா, நான் நடித்துப் பார்த்துக் கொள்ளப் பள்ளி வரை போய் வந்துவிடுகிறேன்" என்று கூறியபடி அங்கிருந்து ஓடினாள் கமலம்.

அவள் சென்ற பிறகு அவள் தாய், 'என்ன இருந்தாலும் ஏழை ஏழைதான்' என்று எண்ணிக்கொண்டு உள்ளே போனாள். அப்போது கமலத்தின் களங்கமற்ற அழகிய முகம் அவள் கண்ணெதிரில் வட்டமிட்டது. 'இப்போது அவள் தந்தை இருந்தால் எப்படி இருப்பான்!' என்று அவளுடைய மனம் எண்ணிப் பொருமியது.

நாட்கள் உருண்டன. நாடகமும் தொடங்கிற்று. தன் பெண் நடிப்பதைப் பார்க்க மங்களமும் வந்திருந்தாள்.

முதலில் கமலம், அரசவையில் நடனம் ஆடும் பெண்ணாக, பள்ளியில் கொடுத்த விலையுயர்ந்த பட்டு உடைகளுடன் அரசனுக்கு முன்னால் ஆடினாள். பிறகு ஆண் உடையில் உத்தமராகத் தோன்றி அரசனிடம் பெண்களைப் பற்றிச் சிறப்பித்துப் பேசியும் அவர்கள் கல்வியின் கட்டாயத்தை வற்புறுத்தியும் அரசனுடைய கேள்விகளுக்கு மிக எளிதாக விடை சொல்லியும் கமலம் தன்னுடைய பாகத்தைச் சிறப்பாக நடித்தாள்.

கமலம் பேசிய வார்த்தைகள்: "கிராமத்திலுள்ளவர்கள், பெண்களைப் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைப்பதில்லை; வழக்கம் அவர்களை விடுவதில்லை. யாராவது கேட்டால், அவர்கள் படித்து என்ன செய்யப் போகிறார்கள் என்பர். ஏன், எவ்வளவோ நற் பணிகள் இல்லையா எனில், 'ஆமாம், வெட்கக் கேடு தான்', எனப் பதில் சொல்லி மறுத்துவிடுவர். ஏன், பெண்கள் படித்து வீட்டிலேயே இருந்து விட்டாலும் அப் படிப்பு வீணாகவா ஆகிவிடும். ஒருகாலும் இல்லை; ஒரு குடும்பம் சரிவர நடந்துவர வேண்டுமானால், ஆணும் பெண்ணும் மற்றக் குடும்ப அங்கத்தினரும் கல்வியில் சிறந்தவராய் இருக்க வேண்டியது கட்டாயம்."

இப்படி கமலம் பேசி முடித்த போது, கைக்கொட்டல் வானைப் பிளந்தது. அரசன் திருந்தி, "பெற்றோர்களே! கிராமவாசிகளே! உங்களுடைய பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பி உங்கள் மக்களையும் எங்கள் பள்ளியையும் முன்னுக்குக் கொண்டு வாருங்கள்" என்று கூறியபோது, மங்களத்தின் உள்ளம், கமலத்தின் பேச்சின் பயனையும் அவளுக்குக் கிடைத்த பரிசிலையும் பற்றிச் சிந்தித்தது. கமலத்தை அழைத்துக்கொண்டு வீடு சென்றாள்.

'நானும் இவ் வூராரைப்போல என் பெண்ணைப் பள்ளிக்கு அனுப்பாமலிருந்தால் அவளுக்கு இவ்வளவு தெளிவும் உணர்ச்சியும் உண்டாயிருக்குமா' என்று வழியெல்லாம் எண்ணி மகிழ்ச்சியடைந்தது அத் தாயின் உள்ளம்!

பதிப்பித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.)